பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**25 06 2026** **THURSDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் அவசரநிலை பிறப்பிக்கப்பட்ட காலம் வரலாற்றின் கருப்பு பக்கங்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே எரிசக்தி ஒத்துழைப்பு மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

3. டிஜிட்டல் கைது முறைகேடு தொடர்பாக நாடு முழுவதும் 80-க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை மேற்கொண்ட சிபிஐ நான்கு பேரை கைது செய்துள்ளது.

4. வெனிசுலாவில் நேரிட்ட நிலநடுக்கத்தில் 32 பேர் உயிரிழந்தனர். 700-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

5. உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள்...

<<<<<<<<>>>>>>

நாட்டில் அவசரநிலை பிறப்பிக்கப்பட்ட காலம் வரலாற்றின் கருப்பு பக்கங்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 1975-ஆம் ஆண்டு இதேநாளில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த காலக்கட்டத்தில் ஜனநாயக மாண்புகளை பாதுகாப்பதற்காக உறுதியுடன் போராடியவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசர நிலை பிறப்பிக்கப்பட்டபோது கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டதாகவும், அரசியல் கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தின் மிகப்பெரிய தாக்குதலாக அவசர நிலை திகழ்ந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதி, சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை பாதுகாப்பதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அவசர நிலையை பிறப்பித்த அந்த நாளை ஒருபோதும் மறக்க இயலாது என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த காலக்கட்டத்தில் ஜனநாயகத்தை மீட்பதற்காக போராடிய அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதாக கூறியுள்ளார்.

அவசர நிலை காலத்தில் நீதித்துறையும் கட்டுக்குள் வைக்கப்பட்டிருந்ததாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்நாளில் ஜனநாயகத்தை பாதுகாக்க அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசியல் சாசனத்தை பாதுகாப்பதில் பிரதமர் திரு நரேந்திர மோடி அர்ப்பணிப்போடு பணியாற்றி வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளையொட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜனநாயகத்தின் மீதும், அரசியல் அமைப்பின் மீதும் நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் அவசரநிலை பிரகடனம் என்று குறிப்பிட்டுள்ளார்.

21 மாதங்கள் இது நீடித்ததாகவும், இந்த காலக்கட்டத்தில் ஜனநாயகம் முடக்கப்பட்டு, அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தின் மீதான இத்தகைய தாக்குதல்கள் இனி ஒருபோதும் நிகழக்கூடாது என்று இந்நாளில் அனைவரும் உறுதியேற்போம் என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<<<<>>>>>>

பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே எரிசக்தி ஒத்துழைப்பு மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய எரிசக்தித்துறை அமைச்சர் திரு மனோகர்லால் வலியுறுத்தியுள்ளார்.

பிரிக்ஸ் நாடுகளின் எரிசக்தி அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தினை **Gurugram-**ல் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

உலகிலேயே மிகப்பெரிய டிஜிட்டல் அடிப்படையிலான மின் விநியோக கட்டமைப்பை இந்தியா கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் 6 கோடிக்கும் மேற்பட்ட ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் திரு மனோகர்லால் கூறினார்.

<<<<<<<<>>>>>>

டிஜிட்டல் கைது முறைகேடு தொடர்பாக நாடு முழுவதும் **80**-க்கும் மேற்பட்ட இடங்களில் சிபிஐ சோதனை நடத்தியது.

மகாராஷ்ட்ரா, பஞ்சாப், தமிழகம் உட்பட **16** மாநிலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக சிபிஐ-யின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் சென்னை மற்றும் கொல்கத்தாவில் தலா இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டிஜிட்டல் கைது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட **200**-க்கும் மேற்பட்ட வழக்குகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் சிபிஐ அந்த செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளது.

<<<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் கட்டுமானப்பணி நடைபெற்று கொண்டிருந்த சேமிப்பு கிடங்கு இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் **9** பேர் உயிரிழந்தனர். **20** பேர் காயமடைந்தனர்.

இன்று அம்மாநில சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த முதலமைச்சர் திரு **Suvendu Adhikari,** உயிரிழந்தவர்களின்

குடும்பத்தினருக்கு தலா **10** லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும் என்றார்.

காயமடைந்தவர்களில் ஒருவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் முதலமைச்சர் கூறினார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து தலா **2** லட்சம் ரூபாய் நிதியுதவி அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

ஸ்ரீ ராம் ஜென்ம பூமி அறக்கட்டளைக்கு கிடைத்த நன்கொடைகள் குறித்து நீதிமன்ற கண்காணிப்பின்கீழ் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுவை அவசரமாக விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையினை உச்சநீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நீதிபதிகள் திருமதி **B V Nagarathna,** திரு **Joymalya Bagchi** அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இருப்பினும், இந்த மனு முறைப்படி பட்டியலிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

<<<<<<<<>>>>>>

உலக வெண்புள்ளிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி, வெண்புள்ளிகள் இயக்கம் சார்பில் ஒன்றுகூடி வரைவோம் என்ற நிகழ்ச்சி மதுரையில் நடைபெறுவதாக அதன் செயலாளர் டாக்டர் உமாபதி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — உமாபதி - 55 Sec. )***

<<<<<<<<>>>>>>

வெனிசுலாவில் நேரிட்ட நிலநடுக்கத்தில் **32** பேர் உயிரிழந்தனர். **700-**க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

**Caracas-**ல் நேரிட்ட இந்த நிலநடுக்கத்தையடுத்து அந்நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, நாட்டு மக்களிடையே உரையாற்றிய அந்நாட்டு அதிபர் **Delcey Rodriguez,** அத்தியாவசியப் பணிகள் மட்டுமே செயல்பாட்டில் இருக்கும் என்றார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வெனிசுலா அதிபர் கூறினார்.

இதற்கிடையே, இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 25 மீட்டர் பிரிவில் **Shaurya Dilip Bharne** வெள்ளிப்பதக்கத்தையும், **Riya Duggal** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் 25 மீட்டர் குழு பிரிவிலும் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

---------

ஆசிய கோப்பை **Bridge** சாம்பியன் போடியில் இந்தியா ஏ மகளிர் அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கோவாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் லீக் சுற்றில் மூன்றாவது இடத்தை பிடித்ததன் மூலம் இந்தியா ஏ மகளிர் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

------------

உலகக்கோப்பை மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

மான்செஸ்டரில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

-------

இலங்கை ஏ அணிக்கு எதிராக இன்று தம்புலாவில் தொடங்கிய முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்துவரும் இந்தியா ஏ அணி முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை ஒரு விக்கெட் இழப்பிற்கு **82** ரன் எடுத்துள்ளது.

-----------

இந்தியா ஏ — இங்கிலாந்து ஏ இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று **Chelmsford-**ல் நடைபெறுகிறது.

இதுவரை நடைபெற்ற இரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சம நிலையில் உள்ளன.

----------

புல்லட் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Nihal Sarin** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இணையதளம் வாயிலாக நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் அவர், ஈரானின் **Parham Maghsoodloo-**வை வென்றார்.

**<<<<<<<<<END>>>>>>>**